மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு ஒன்றியத்திற்குச் சொந்தமான விருந்தினர் மாளிகை 1964-லேயே கட்டப்பட்டு, அதைத் திருத்தியமைக்க வேண்டுமென்று 13-8-1996-லே சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டது. பின்னர் இதற்கான விண்ணப்பம் C.M.D.A. வுக்கு 17-4-1998-ல் அனுப்பப்பட்டது. அந்த விண்ணப்பம் அனுப்பப்பட்டபோது, அந்த இடத்தைச் சுற்றி மாநகராட்சி, பொதுப் பணித் துறை மற்றும் பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. இப்படி இருக்கின்ற இடத்திற்கான வரைபடத்தில் உள்ளவாறு 1964-இல் அதில் கட்டப்பட்ட கட்டடம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாகும். ஆனால், அதற்கான பட்டா வழங்கப்படவில்லை. இதற்கு பொதுப் பணித் துறை, அனுமதி பெறவேண்டும். பாதுகாப்புத் துறை அனுமதி பெற வேண்டுமென்று, 20-5-1998-லே அந்த விண்ணப்பம் திருப்பி அனுப்பப்பட்டது. இப்போது திருத்தியமைக்கப்பட்டு, வரைபடம் புதியதாக வரையப்பட்டு அந்த இடத்திற்குச் சொந்தமான 1153 சதுர மீட்டரிலே ஒரு புதிய வரைபடம் வரையப்பட்டு 15-3-2000-ல் புதிய விண்ணப்பம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு C.M.D.A.யின் அனுமதி கிடைத்தவுடன் அந்தப் பணி உடனடியாகத் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 154, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

154—

அடுக்கு மாடி வீடுகள்

***29754—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகராட்சியில் வாழும் ஏழை மக்களுக்கு, குடிசைகளை மாற்றி அடுக்கு மாடி வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2000 மார்ச் 30]

திரு. உ. திசைவீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகரம் ஒரு வளர்ந்து வருகிற நகரமாகும். இங்கு வைகை ஆற்றின் இரு கரைகளிலும் ஏழையெளிய மக்கள் குடிசைகளைப் போட்டு வாழ்ந்து வருகின்றார்கள். வெள்ளம் வருகின்ற நேரத்தில், இந்த மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நிவாரணத் தொகையாக பல இலட்சம் ரூபாய் ஆண்டுதோறும் அரசுக்குச் செலவாகிற சூழ்நிலை உள்ளது. எனவே, மாநகராட்சிப் பகுதியிலே மட்டும் செயல்படுகின்ற இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே பரமக்குடியில் வாழ்கின்ற ஏழையெளிய மக்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டித் தர அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகராட்சிக்குச் சொந்தமான 2.30 ஏக்கர் பரப்பளவு நிலத்தை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு மாற்றித் தர பிரேரணைகள் பரமக்குடி நகராட்சிக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. இந்நிலத்தை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு மாற்றம் செய்தபின் இப்பகுதி குடிசைவாழ் மக்களுக்கு வாரியத்தின் நிதி ஆதாரத்தைப் பொறுத்து அடுக்குமாடி குடியிருப்போ அல்லது மேம்பட்ட மனையோ அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 155, திரு. டி. மணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

155—

ஓமியோபதி மருத்துவப் பிரிவு

***14329—திரு. டி. மணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனைகளில் 9-வது திட்டக் கமிஷன் பரிந்துரைப்படி ஓமியோபதி மருத்துவப் பிரிவு ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.